

ஈரோடு தெற்கு மாவட்ட கழக முகாம் அலுவலகத்தில் கோட்டை பகுதி கழக செயலாளர் பொ.இராமச்சந்திரன் ஏற்பாட்டில் 28 வது வட்ட பிரதிநிதியும், செயல்வீரரும், கழக மூத்த முன்னோடியுமான என்.சிவக்குமாரின் களப் பணியை பாராட்டி மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி மிதிவண்டி வழங்கினார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் எல்லப்பாளையம் சிவக்குமார், மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், பகுதி பிரதிநிதி பாபு (எ) வெங்கடேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை சுகாதார வட்டாரம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், பொம்மாடிமலை, பி.எஸ்.கே மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் ”நலம் காக்கும் ஸ்டாலின் உயர்மருத்துவ சேவை முகாமினை, இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் துவக்கி வைத்து பார்வையிட்டு, மருத்துவ பயனாளிகளிடம் குறைகளை கேட்டறிந்தார். உடன், சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, கே.கே.செல்லப்பாண்டியன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்

# ஒன்றிய, நகரக் கழகப் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் கடந்த 30.04.2025 அன்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள குன்றத்தூர் தெற்கு, குன்றத்தூர் மத்திய, காட்டாங்கொளத்தூர் தெற்கு, காட்டாங்கொளத்தூர் மத்திய ஆகிய ஒன்றியங்கள் மற்றும் மறைமலைநகர் வடக்கு, மறைமலைநககர் தெற்கு ஆகிய நகரங்கள் பிரிக்கப்பட்டு, அவற்றுக்கு பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றிய, நகரங்களுக்கு பொறுப்புக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### குன்றத்தூர் தெற்கு ஒன்றியம்

பொறுப்புக்குழு உறுப்பினர்கள்:1.வ.நந்தகோபால், பஜனைகோவில் தரு, பனப்பாக்கம், வட்டம்பாக்கம் ,2.சி.பார்த்தசாரதி, அண்ணா தெரு, ஆரம்பாக்கம், செர்ப்பணஞ்சேரி. 3.மூ. ராஜேந்திரன், கண்ணபிரான்கோவில் தெரு, சென்னக்குப்பம்.4.எஸ்.கர்ணன், பெரிய தெரு, கீழ்படப்பை, படப்பை.5.குமுதா சுமன், எம்.சி.ராஜா தெரு, அண்ணா தெரு, மணிமங்கலம்.6.டி. லோகநாதன், ஏரிக்கரை தெரு, உமையாள்பரணசேரி,7.த.ஏழுமலை, அம்பேத்கர் தெரு, குத்தனூர், மாடம்பாக்கம் ஊராட்சி.8.என்.வாசு, பேட்டை தெரு, நாட்டரசன்பட்டு ஊராட்சி.

### குன்றத்தூர் மத்திய ஒன்றியம்

பொறுப்புக்குழு உறுப்பினர்கள்:1.மு. சுப்பிரமணி, மேட்டுத் தெரு, நடுவீரப்பட்டு ஊராட்சி. 2.வாசுகி மகேஷ், நேதாஜி தெரு, வடக்கு மணியம்பாக்கம் 3.மா. பரிமேலழகன், பஜனைகோவில் தெரு, சிக்கராயபுரம் ஊராட்சி.4.வி. அரி, கலைஞர் நகர், பெரிய நகர், நந்தம்பாக்கம் ஊராட்சி.5.க. ஏழுமலை, கன்னியம்மன்கோவில் தெரு, எருமையூர்.6.இ. விஸ்வநாதன், பிள்ளையார்கோவில் தெரு, கொழுமணிவாக்கம்.7. மு.செல்வமணி,முனுசாமிதெரு, தர்காஸ் வரதராஜபுரம், வரதராஜபுரம்,8.கே.என்.சி.சத்தியமூர்த்தி, கக்கன்ஜீ தெரு, கொல்லச்சேரி,

### காட்டாங்கொளத்தூர் தெற்கு ஒன்றியம்

பொறுப்புக்குழு உறுப்பினர்கள்:1.இ.ஏழுமலை, பிள்ளையார் கோவில் தெரு, வெங்கடாபுரம். 2.எம். டில்லி, வ.உ.சி. தெரு, வீராபுரம், பரனூர்.3.வி.டி.பி. கௌதம், பஜனைகோவில் தெரு, வடகால் கிராமம்.4.செ. அருள்தேவி, காஞ்சிபுரம் நெடுஞ்சாலை, திம்மாவரம்.5.எஸ். அசோகன், காந்தி சாலை, புலிப்பாக்கம்.6.என். பிரபாகரன், அம்பேத்கர் தெரு, ஆத்தூர் வடபாதி. 7.சி. முத்துக்குமாரசாமி, காஞ்சிபுரம் நெடுஞ்சாலை, பாலூர் கிராமம்.8.எஸ். ஜீவானந்தம், பிள்ளையார் கோவில் தெரு, பரனூர்.

### காட்டாங்கொளத்தூர் மத்திய ஒன்றியம்

பொறுப்புக்குழு உறுப்பினர்கள்:1.வி. ராஜேந்திரன், பள்ளத் தெரு, அஞ்சூர்.2.வி.ஜி திருமலை, பிள்ளையார் கோவில் தெரு, வேண்பாக்கம்.3.கே.எஸ். ரவி, கன்னிவாக்கம், பெருமாட்டுநல்லூர்.4.ஆர். கருணாகரன், தமிழ்ஒளி தெரு, என்.ஜி.ஜி.ஓ.நகர், மேலமையூர்.5.சி.எம். கதிரவன், செங்குன்றம் ரோடு, சிங்கபெருமாள்கோவில்.6.சி. ஜெயக்குமார், மிஷன் ரோடு, வல்லம்.

### மறைமலைநகர் வடக்கு நகரம்

பொறுப்புக்குழு உறுப்பினர்கள்:1.அரங்க. கிரிச்சந்திரன், நின்னக்காட்டூர், நின்னக்கரை, மறைமலைநகர்.2.டி. முரளி, அண்ணா சாலை, வல்லாஞ்சேரி, கூடுவாஞ்சேரி அஞ்சல். 3.தேவி, தி.நா.அறிவெளி சாலை, என்எச்2 விரிவு, மறைமலைநகர்.4.வி. வெங்கட், காமராஜர் தெரு, களிவந்தப்பட்டு, காயரம்பேடு அஞ்சல்.5.ஆர். அசோகன், பிள்ளையார் கோவில் தெரு, பொத்தேரி மேற்கு.6.ஆர். சீனிவாசன், 3வது தெரு, காந்தி தெரு, நின்னக்கரை. 7.வி.சுந்தர், அம்பேத்கர் தெரு, எல்ஐஜி, என்எச்1, மறைமலைநகர்.8.எம்.முத்து, துலுக்கானத்தமன் கோவில் தெரு, பொத்தேரி கிழக்கு.9. சி. தங்கராஜ், வாஞ்சிநாதன் தெரு, என்எச் 3, மறைமலைநகர்.

### மறைமலைநகர் தெற்கு நகரம்

பொறுப்புக்குழு உறுப்பினர்கள்:1.சு.சுப்பிரமணி, பெரிய தெரு, செங்குன்றம், மல்ரோசாபுரம். 2.இர. கருணாநிதி, காந்தி தெரு, திருக்கச்சூர்.3.பிரதீபா ஆல்பர்ட், எம்.ஐ.ஜி. அம்பேத்கர் தெரு, இணைவு1.4.ர. மருதீஸ்வரன், மாரியம்மன் கோவில் தெரு, கீழக்கரணை.5.ரா. மோகனன், எட்டியம்மன் கோவில் தெரு, சட்டமங்கலம்.6.க. கோதண்டம், பஜனைகோவில் தெரு, செங்குன்றம், மல்ரோசாபுரம்.7.தா.வெங்கடேசன், யூனியன் சாலை, பேரமனூர். 8.து.வேதாச்சலம், பாரதி நகர், அனுமந்தபுரம் ரோடு, செங்குன்றம். 9.விஜயலட்சுமி நித்தியானந்தம், ஒட்டகூத்தர் தெரு, இணைவு-1.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை- 600 018.
நாள்: 04.10.2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.



கோவை மாநகர் மாவட்டம், அண்ணா நகர் பகுதி, பீளமேடு புதூர், வார்டு எண் : 52, பூத் எண் : 92 BLC நிர்வாகி விஜயராணி இயற்கையெய்தினார் என்ற செய்தி அறிந்து பீளமேடு புதூரில் உள்ள அவரது இல்லத்திற்கு கழக தீர்மானக்குழுச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் நேரில் சென்று மலர் அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலத் தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், 52 வது வட்டக் கழகச் செயலாளர் கி. நாராயணன், நாகராஜ், குஞ்சான், முருகேஷ், ராபர்ட், முத்துபாண்டியன், அமுதா, விஜயா, காந்திமதி உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## இரக்கம், துயரம், துன்பம், இவற்றின் வெளிப்பாடே அழுகை!

# மனிதநேயமிக்க அமைச்சரின் அழுகையை அரசியலாக்காதீர்!

## தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் கு.தியாகராஜன் அறிக்கை!

சென்னை, அக். 6 –

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநில தலைவர் கு. தியாகராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

கடந்த சில தினங்களுக்கு முன்பு கரூரில் நடைபெற்ற விரும்பத்தகாத சம்பவத்தினால் தமிழ் உறவுகள் 41 பேர் அகால மரணம் அடைந்திருக்கும் செய்தி உலகத்தையே உலுக்கி உள்ளது.

இதில் யார் மீது குற்றம் சொன்னாலும், யார் மீது அடுக்கடுக்காகப் புகார்களை அடுக்கினாலும் பிரிந்தவர்கள் திரும்ப வரப்போவது இல்லை, அவர்கள் குடும்பங்களில் ஏற்பட்டுள்ள துயரங்களும் தீரப்போவதில்லை.

நிலைமை இவ்வாறு இருக்க பிணத்தின் மீது அரசியல் செய்து பிழைப்பு நடத்தும் சிலர் இதை அரசியலாக்க முயன்று வருவது வேதனை. எந்த கட்சி எந்தக் கூட்டம் நடத்தினாலும் அதில் எந்தவிதமான பாதிப்பு ஏற்பட்டாலும் உடனடியாக அரசு களத்தில் இறங்கியே ஆக வேண்டும்.

இந்தப் பெரும் சோகம் நடந்ததைக் கேள்விப்பட்ட சில நிமிடங்களுக் குள்ளாகத் தனது இதயப்பூர்வமான இரக்கத்துடன் உடனடி நட வடிக்கைகளில் இறங்கி, அதிகாரிகளை அழைத்து, மனித உயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்ற உன்னத நோக்கோடு அரசு இயந்திரத்தை முடக்கி விட்ட தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் செயல்பாடுகள் போற்றுதலுக்கும் பாராட்டுக்கும் உரியது.

அதைவிட நடந்த சம்பவம் பற்றிக் கேள்விப்பட்டவுடன் அருகாமை மாவட்ட அமைச்சர்களைத் தொடர்பு கொண்டு உடனடியாகக் கரூருக்கு விரைந்து சென்று, மனித உயிர்களைக் காப்பாற்றுங்கள் என்று கட்டளையிட்ட முதலமைச்சரின் ஆணையை ஏற்று, அருகாமை மாவட்ட அமைச்சரான பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் களப் பணி ஆற்றிக்கொண்டிருந்த நிலையில் கரூருக்குத் தன் அதிவேகப் பயணத்தைத் தொடங்கி நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களை மருத்துவமனையில் சந்தித்து மனித நேயத்தோடு மக்களைக் காக்கத் தன் அத்தனை முயற்சிகளையும் உண்மையாக மேற்கொண்டு பம்பரமாகச் சுழன்று களத்தில் இறங்கினார்.



கண்ணெதிரே பிஞ்சுக் குழந்தைகள், தாய்மார்கள், குடும்பத்தைத் தாங்கி நிற்கும் தந்தைமார்கள் மற்றும் எதிர்காலத் தலைமுறைகள் எல்லாம் எதிர்பார்ப்பு ஏதும் இன்றிக் கூட்டத்திற்கு வந்து, விரும்பத்தகாத செயலினால் தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டதை நேரில் கண்ட குழந்தை உள்ளம் கொண்ட அமைச்சர் அவர்கள், மாண்டுபோன உயிர்களையும் குறிப்பாக வாழ்க்கையில் கொஞ்சமும் அனுபவிக்காத பிஞ்சு குழந்தைகளின் மரணத்தையும் பள்ளி மாணவச்செல்வங்களின் மரணத்தையும் நினைத்து உயிர்களின் உணர்வியல் வெளிப்பாடாகிய கண்ணீர் விட்டு அழுத காட்சி உள்ளபடியே அவர் கண்களில் மட்டுமல்ல காண்பவர் அத்தனை பேர் கண்களிலும் கண்ணீரை வரவழைத்தது என்பதுதான் உண்மை.

இத்துயர நிகழ்வில் நாடே கண்ணீர் சிந்தும் சூழலில் அமைச்சர் ஒருவர் தன் உணர்வை வெளிப்படுத்தியது எந்த விதத்தில் தவறாகும்?

அது என்ன... அமைச்சர் என்றால் அழக்கூடாதா? உணர்வு அற்ற இயந்திரமா? அமைச்சர் பெருமக்கள் மக்களில் ஒருவராக இருப்பது குற்றமா?

அமைச்சர் என்பதைத் தாண்டி, சட்டமன்ற உறுப்பினர் என்பதைத் தாண்டி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அன்பைப் பெற்றவர் என்பதையும் தாண்டி, களத்தில் உள்ள ஒரு சாதாரண மனிதன்தான் தானும் என்ற நிலையில் மக்கள் மடிந்து மரணிக்கும் காட்சிகளைப் பார்த்து அழாமல் இருக்க அமைச்சர் என்ன மனசாட்சி இல்லாதவரா ?

மனிதநேயமிக்கவரின் அழுகையை அரசியலாக்க வேண்டாம். முடிந்தால் மனித இறப்புக்கு உங்களால் முடிந்த ஒரு சொட்டுக் கண்ணீரை விடுங்கள்! இல்லையென்றால் மனிதநேயமற்ற, மாண்பற்ற மனிதர்களாய் வாழ்ந்துவிட்டுச் செல்லுங்கள்!

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## திருநெல்வேலி மத்திய மாவட்டம்

## திருநெல்வேலி கிழக்கு மாநகரம்

# 29, 30, 32, 44 மற்றும் 55 ஆகிய வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

**திருநெல்வேலி மத்திய மாவட்டம், திருநெல்வேலி கிழக்கு மாநகரம், பாளையங்கோட்டை தெற்கு பகுதி**, 55வது வட்டச் செயலாளர் பெர்க்மான் பாஸ்கர் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **அக்பர் ஷெரிப்** (சிவந்திப்பட்டி ரோடு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி) அவர்கள் 55வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும் - 32வது வட்டச் செயலாளர் கதிரேசன் அவர்களுக்குப் பதிலாக **ஆர். சதிஷ்குமார்** (15ஏ, காரிய நாயனார் தெரு, பாளையங்கோட்டை, திருநெல்வேலி-627002) அவர்கள் **32வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;**

**தச்சநல்லூர் தெற்கு பகுதியைச் சேர்ந்த**, 29வது வட்டச் செயலாளர் சிவ அய்யப்பன் அவர்களுக்குப் பதிலாக **ஏ.வேல்ராஜா** (40/5ஏ, மேலத் தெரு, சி.என்.கிராமம், திருநெல்வேலி-627 001.) அவர்கள் **29வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்** 30வது வட்டச் செயலாளர் தென்கரை முத்து அவர்களுக்குப் பதிலாக **ஆர்.ராஜேந்திரன்** (15சி, கீழத் தெரு, சிந்துபூந்துறை, திருநெல்வேலி -627 001.) அவர்கள் **30வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;**

**மேலப்பாளையம் மேற்கு பகுதி**, 44வது வட்டச் செயலாளர் சாகுல்ஹமீது அவர்களுக்குப் பதிலாக **என்.எம்.மைதீன் கனி** (மூலன் அகமது பிள்ளை தெரு, மேலப்பாளையம், திருநெல்வேலி -627005) அவர்கள் **44வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்** நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை- 600 018.
நாள்: 04.10.2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

## புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

# அன்னவாசல் வடக்கு, அன்னவாசல் தெற்கு, அன்னவாசல் மேற்கு, அன்னவாசல் கிழக்கு, விராலிமலை மத்திய ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் ஒன்றியக் கழக பொறுப்பாளர்கள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில் உள்ள விராலிமலை மேற்கு ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி மறுசீரமைக்கப்படுகிறது; அன்னவாசல் வடக்கு மற்றும் தெற்கு ஒன்றியங்கள் நான்காக பிரிக்கப்பட்டு, அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு பிரிக்கபட்ட **அன்னவாசல் வடக்கு, அனவாசல் தெற்கு, அன்னவாசல் மேற்கு, அன்னவாசல் கிழக்கு, விராலிமலை மத்திய** ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் மற்றும் பேரூர்கள் கொண்டதாக அமையும்.

**அன்னவாசல் வடக்கு ஒன்றியம் :** 1. விளத்துப்பட்டி, 2. அம்மாச்சத்திரம், 3. இரும்பாளி, 4. மேலூர், 5. முத்துக்காடு, 6. நார்த்தாமலை, 7. பூங்குடி, 8. சத்தியமங்கலம், 9. தொடையூர், 10. வெள்ளனூர் ஆகிய 10 ஊராட்சிகள் மற்றும் இலுப்பூர் பேரூர்.

**அன்னவாசல் தெற்கு ஒன்றியம் :** 1. வயலோகம், 2. மாங்குடி, 3.தச்சம்பட்டி, 4. மன்னவேளாம்பட்டி, 5. முக்கணாமலைப்பட்டி, 6. புதூர், 7. பரம்பூர், 8. கிளிக்குடி, 9. ஆலத்தூர், 10. இடையப்பட்டி, 11. வீரப்பட்டி, 12. தளுஞ்சி, 13. கதவம்பட்டி, 14. எண்ணை ஆகிய 14 ஊராட்சிகள் மற்றும் அன்னவாசல் பேரூர்.

**அன்னவாசல் மேற்கு ஒன்றியம் :** 1. இராப்பூசல், 2. இருந்திரப்பட்டி, 3.வெட்டுக்காடு, 4. வெள்ளாஞ்சார், 5. புங்கினிப்பட்டி, 6. கட்டக்குடி, 7.திருநல்லூர், 8. கீழக்குறிச்சி, 9. ஈஸ்வரன் கோவில்10. கோத்திராப்பட்டி ஆகிய 10 ஊராட்சிகள்.

**அன்னவாசல் கிழக்கு ஒன்றியம் :** 1. கோதண்டராமபுரம், 2. மதியநல்லூர், 3. பணம்பட்டி, 4. சித்தன்னவாசல், 5. ஆரியூர், 6. பெருமாநாடு, 7.திருவேங்கைவாசல், 8. குடுமியான்மலை, 9. புல்வயல் ஆகிய 9 ஊராட்சிகள்.

### ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்

மேற்கண்டவாறு அமையப் பெற்ற அன்னவாசல் வடக்கு, அன்னவாசல் தெற்கு, அன்னவாசல் மேற்கு, அன்னவாசல் கிழக்கு ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### அன்னவாசல் வடக்கு ஒன்றியம்

பொறுப்பாளர் : ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, புதுக்கோட்டை மாவட்டம்.

### அன்னவாசல் தெற்கு ஒன்றியம்

பொறுப்பாளர் : கே.எஸ். சந்திரன்,புதுக்கோட்டை மாவட்டம்.

### அன்னவாசல் மேற்கு ஒன்றியம்

பொறுப்பாளர் : எம். பழனியப்பன்,புதுக்கோட்டை மாவட்டம்.

### அன்னவாசல் கிழக்கு ஒன்றியம்

பொறுப்பாளர் : எம். கோவிந்தராஜ்,புதுக்கோட்டை மாவட்டம்.

### விராலிமலை மத்திய ஒன்றியம்

விராலிமலை மேற்கு ஒன்றியத்தில் விராலிமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட **விராலூர் ஊராட்சி விராலிமலை மத்திய ஒன்றியத்துடன்** இணைக்கப்படுகிறது. விராலிமலை மேற்கு ஒன்றியமானது மீதமுள்ள 14 ஊராட்சிகளுடன் தொடர்ந்து செயல்படும்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை- 600 018.
நாள்: 04.10.2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.



புதுக்கோட்டை மாவட்டம்,அன்னவாசல் பேரூராட்சி மக்கள் மன்றத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் அன்னவாசல் தெற்கு ஒன்றியச் செயலாளர் கே.எஸ். சந்திரன், அன்னவாசல் பேரூர் கழக செயலாளர் எம்.எஸ்.ஏ.முகம்மது ரிஷா, இலுப்பூர் வட்டாட்சியர் சக்திவேல், வட்டார வளர்ச்சி அலுவலர் இந்திராகாந்தி, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அ.பிரபா உள்ளிட்டோர் கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்தனர். அதனைத் தொடர்ந்து பொதுமக்களிடம் விண்ணப்பங்களை பெற்று கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.